A2

016316
10 JUL 2020
சென்னை

முதன்மைச் செயலர்/ போக்குவரத்து ஆணையர், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின்

செயல்முறை ஆணைகள்

முன்னிலை:திரு.தென்காசி சு ஜவஹர், இ.ஆ.ப.,

செ.மு.ஆ.எண்.43081/ஆர்பி1/2016 (ப.ஆ.எண்.236/2020) நாள்.04.07.2020

பொருள்: பணிபமைப்பு - போக்குவரத்து துறை - திரு.எம்.கசாலி நஜிமுதீன், த/பெ.(லேட்) மொகைதீன் அப்துல்காதர் அவர்கள் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டது - தனியரது பணி வரன்முறை செய்தல் - ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. போக்குவரத்து ஆணையர், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.20493/ஆர்2/2002 (ப.ஆ.எண்.496/ 2007) நாள்.04.10.2007.
2. அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ-1) துறை, நாள்.02.03.2016.
3. அரசு கடித எண்.39877/போ.வ.4/2019-2, நாள்.22.11.2019.

*******

ஆணை:

கோபிச் செட்டிபாளையம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பண்ணாரி சோதனை சாவடியில், அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்த திரு.மொகைதீன் அப்துல்காதர் அவர்கள், தமது பணிக்காலத்தில் 03.10.1996 அன்று காலமானதைத் தொடர்ந்து, அன்னாருடைய மகனும், வாரிசுதாரருமான திரு.எம்.கசாலி நஜிமுதீன் அவர்கள் பார்வை-1ல் காணும் செயல்முறை ஆணையின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக போக்குவரத்துத் துறையில் பணி நியமனம் செய்யப்பட்டார். தனியர் 15.10.2007 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து, தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

பார்வை-2ல் காணும் அரசாணை பத்தி எண்.6(i)-ல்,

> "01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rule) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Order) தேவைப்படாத அனைத்து அலுவலர்களின் பணி நியமனத்தையும் நடைமுறையில் உள்ள விதிகளுக்கு உட்பட்டு அரசு வரன்முறை செய்து ஆணையிட்டுள்ளது".

மேற்கண்ட அரசாணையின்படி தனியரது பணி, அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 15.10.2007 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

தனியரது இப்பணிவரன்முறை ஆணை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவிற்கு உட்பட்டது என்ற நிபந்தனையின் பேரில் வழங்கப்படுகிறது. மேலும் பணிவரன்முறை

Scanned by TapScanner

ஆணை வழங்கப்பட்ட இப்பணியாளருக்கு நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு, பவானிசாகர் அடிப்படை பயிற்சி மற்றும் தகுதிகாண் பருவம் முடித்த பிறகே இரண்டாவது மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வுகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்./- தென்காசி சு ஜவஹர்,
முதன்மைச் செயலர்/
போக்குவரத்து ஆணையர்,
சென்னை-5.

<u>பெறுநர்: (ப.அ.ஒ.அ.)</u>
திரு.எம்.கசாலி நஜிமுதீன், இளநிலை உதவியாளர்,
வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், சென்னை (தெற்கு)
(சென்னை (தெற்கு), வட்டாரப் போக்குவரத்து அலுவலர் மூலமாக)

<u>நகல் : (ப.அ.ஒ.அ.)</u>
1. வட்டாரப் போக்குவரத்து அலுவலர், சென்னை (தெற்கு) - உரிய நடவடிக்கைக்காக.
2. P.C. to T.C./J.T.C.(A)/D.T.C.(A)
3. பணியமைப்பு ஆணை புத்தகம் / உதிரி -2

/ஆணைப்படி/

(கு.சண்முகநாதன்)
மாநிலப் போக்குவரத்து அதிகாரியின்
நேர்முக உதவியாளர்

04/7/20

Scanned by TapScanner